★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 65630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: பங்குனி 27உ திங்கள் (9—4—56) ★ ★ வெளியீடு: பங்குனி 28உ செவ்வாய் (10—4—56) [இதழ் 254

ரஷ்யாவில் மதுவிலக்கு!

ரஷ்யாவில் மதுவிலக்கு! ஆச்சரியம்தான்! ஆசைப்படுகிறார்களாம், சோவியத் தலைவர்கள்—தெரிவித்திருக்கிறார், பம்பாய் முதன் மந்திரி மொரார்ஜி தேசாய்.

ரஷ்யத் தலைவர்கள் இந்தியா வந்தபோது பம்பாயில் அவர்களை வரவேற்றாரல்லவா, மொரார்ஜி தேசாய்? அப்போது புல்கானினும், குருஷ்சேவும், பம்பாயில் மது விலக்கு வெற்றிகரமாக அமுல் செய்யப்படுவது கேட்டு பாராட்டுரை வழங்கினார்களாம். அதுபோதுதான், தங்கள் நாட்டிலும் மதுவிலக்கை அமுலாக்க ஆசைபடுவதாக அவர்கள் கூறினார்களாம்!

தி. மு. க. மீது காமராசர் பாய்ச்சல்!

தேவிகுளம்-பீர்மேட்டிற்காக கிளர்ச்சி கூடாதாம்

கழகத்துடன் பிற கட்சிகள் ஒத்துழைப்பது வருந்தற்குரியதாம்

தனது கையாலாகாத்தனத்தை மறைக்க காமராசர் முயற்சி

'தாசர்புத்தி' தலைக்கேறிய நிலையில் பிதற்றல்

சிற்பி செதுக்காத கற்சிலை போலிருந்த காமராசர்—நமது மாநில முதன் மந்திரி, இப்போதெல்லாம் பேசப் பழகிவிட்டார்—பேசி யிருக்கிறார், சேலத்தில்—பேசவில்லை—தவறு, தவறு!—தாக்குதல் நடத்தி யிருக்கிறார், தி. மு. கழகம் மீது!

தாக்குபவர், புதியவரல்ல—நமக்கு! அதேபோல, தாக்கப்படும் கழகமும், முதன்முறையாக இதுபோன்ற தாக்குதல்களைச் சந்திக்கவில்லை!

ஆணவத்தோடு, ஆட்சியில் அமர்ந்து, ஆடாத ஆட்டமெல்லாம் ஆடி, 'அழித்துவிடுவேன்; ஒழித்துவிடுவேன்' என்றெல்லாம் ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருந்த ஆச்சாரியாரின் இடத்தை அலங்கரிக்கும் காமராசர், கழகத்தின் மீது தாக்குதல் நடத்துகிறார் என்பது நமக்கு வருத்தத்தை அல்ல—மகிழ்ச்சியைத்தான் தருகிறது.

'இப்போதைய சர்க்கார்—காமராசர் சர்க்கார், மக்களின் நலன்களுக்கு விரோதமாக நடந்துகொள்கிறது,' என்று, தி. மு. கழகத்தவர் குற்றம் சாட்டுகின்றனராம் — கூறியிருக்கிறார் காமராசர்!

கூறிவிட்டு, அந்தக் குற்றச்சாட்டிற்குப் பதில் தருவதாக எண்ணிக்கொண்டோ என்னவோ, நாங்கள் யார் தெரியுமா—'பெருங்காய டப்பா'—என்பதுபோல, காங்கிரசின் பழம் பெருமையைப் பாடத் துவங்கியிருக்கிறார்.

காங்கிரஸ்தான், சுதந்திரத்திற்காகப் போராடிய கட்சியாம்.

காங்கிரஸ் — அகிம்சை, உண்மை வழிநின்று, உண்மையாகவே ஜனநாயக ரீதியாக நிர்வாகத்தை நடத்துகிறதாம்!

காமராசர், மக்களின் பிரதிநிதியாகத்தான் பதவியிலிருக்கிறாராம்—அவரே தெரிவித்திருக்கிறார்.

அவர் பதவியிலிருக்கும்வரை மக்களின் நலன்களைப் பேணுவாராம்—பேசி யிருக்கிறார்—நாடு, இவரது மக்கள் நலம் பேணும் தன்மை கண்டு, கைகொட்டிச் சிரித்துக் கொண்டிருக்கும்போது!

இம்மட்டுமோ? கழகத்திடம் நாட்டிற்கான பொருளாதாரத் திட்டம் இல்லையாம்—கூறுபவர் காமராசர் என்பதை மறந்துவிடாதீர்கள்! பொருளாதார விற்பன்னரல்லவா? தமிழ் நாட்டிற்கான பொருளாதாரத் திட்டங்களை மட்டுமின்றி இந்தியாவிற்கே, இவர்தானே வழி காட்டிக் கொண்டிருக்கிறார்? அதனால்தான், 'பதவிக்கு வரவிரும்பும் தி. மு. கழகத்திடம், பொருளாதாரத் திட்டமில்லை,' என்று கூறுகிறார் போலும்!

கழகத்திற்கு தேர்தலில் நிற்க விருப்பமில்லையாம் —காமராசர் தான் கூறியிருக்கிறார்!

தேர்தலைப் பற்றி நமது கழகம் என்ன கருதுகிறது என்பதை நாடு அறியும்; ஆனால், நாட்டை ஆள்வதாக எண்ணிக்கொண்டிருக்கும் காமராசர், அறிந்தும் அறியாதவர்போல, நம்மைத் தாக்குவதாக நினைத்துக்கொண்டு பேசியிருக்கிறார். எங்கே, கழகம் தேர்தலில் நின்று விடுகிறதோ என்ற அச்சம் அந்த மகானுபாவரை எவ்வளவு வாட்டுகிறது என்பதைத்தானே காட்டுகின்றது. அவரது இந்தப் பேச்சு!

மாநிலப் புது அமைப்பு மசோதா வெளியானதை ஒட்டி எழுந்துள்ள சூழ்நிலையை தி.மு. கழகம் பயன்படுத்திக்கொள்ளப் பார்க்கிறதாம்! இந்தியாவிலிருந்து, சென்னை மாநிலத்தைத் துண்டாடிவிட முயற்சிக்கிறதாம்! ஏதோ புதிதாகக் கண்டவர் போல பேசியிருக்கிறார்.

கழகத்தின் இலட்சியமே, வடநாட்டு ஏகாதிபத்தியப் பிடிப்பிலிருந்து தென்னாட்டை விடுவிப்பது என்பதுதானே! இதில், இன்றென்ன புதுமை கண்டாரோ தெரியவில்லை?

தென்னாட்டைப் பிரிக்க வேண்டுமென்பது அபத்தமாம்—அவர்தான் பேசி யிருக்கிறார்; ஆனால், எப்படி அபத்தமாகும் என்பதை அவர் விளக்கக் காணோம்! தெரிந்தால் அல்லவா, விளக்குவதற்கு?

நாட்டுக்காக உழைத்தவர்களும், இதுகாறும் தி. மு. கழகத்தை எதிர்த்தவர்களுமான சில கட்சியினர் கழகத்துடன் சேர்ந்து போராட்டம் நடத்தியது கண்டு, வருந்துகிறாராம், காமராசர்! ஐயோ பாவம்!

"தேவிகுளம் — பீர்மேடு வேண்டுமென்று கிளர்ச்சி நடத்தினார்கள்; சென்னை சர்க்காரும் அவற்றைப் பெற முயற்சித்தது; ஆனால், கூடலூர், கொள்ளேகாலத்திற்காகவும் தகராறு வந்தது; அதனால்தான், நாட்டுத் தலைவர்கள், இதுபற்றி ஒரு முடிவு செய்து, மசோதா தயாரித்தார்கள்; எனவே, அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும்," என்றுகூறி, தனது கையாலாகாத்தனத்தையும், 'தாசர் புத்தி'யையும் வெட்கமில்லாமல் வெளிக்குக் காட்டினாராம், காமராசர்!

'சிலர் நடத்தும் கிளர்ச்சி

(4-ம் பக்கம் பார்க்க

விவசாயக் கல்வி வளர்ச்சி

இந்தியாவிற்கு அமெரிக்கா உதவி

இந்திய விவசாயத்துறை வளர்ச்சியில் அமெரிக்கா மிகுந்த அக்கரை காட்டுகிறது. நான்கு பெரிய அமெரிக்கக் கல்லூரிகள், இந்தியாவில் விவசாயக் கல்வி வளர்ச்சிக்கு உதவும் என்று கூறப்படுகிறது.

இந்தத் தகவல் சர்வதேச கூட்டுறவு நிர்வாகத்திலிருந்து தரப்படுகிறதாம்.

பழுப்பு நிலக்கரி படிவங்கள்

தமிழ் நாட்டில் கேணிப்பட்டு கிராமத்திலும் உள்ளதாம்

அதுபற்றி விரிவான ஆராய்ச்சி மேற்கொள்ள இயலாதாம்!

தென் கன்னடம், மலபார் மாவட்டங்களிலும், தென் ஆற்காடு மாவட்டத்தில் கேணிப்பட்டு கிராமத்துக்கு அருகாமையிலும் பழுப்பு நிலக்கரிப் படிவங்கள் இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறதென்றும், ஆனால் அவைகளின் அளவு மிகக் கொஞ்சமாக இருக்கும் என்றும், தற்போதைக்கு அதுபற்றி விரிவான ஆராய்ச்சி வேலைகள் எதுவும் மேற்கொள்ளப் போவதில்லை என்றும் மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பர்மாவிலிருந்து அரிசி இறக்குமதியா?

பண்டமாற்று அடிப்படையில் இந்தியா முயற்சி?

பண்டமாற்று அடிப்படையில், இந்தியப் பண்டங்களுக்குப் பதிலாக பர்மாவிலிருந்து கணிசமான அளவுக்கு இந்தியா அரிசி இறக்குமதி செய்யும் என்று தெரிவதாகச் செய்தி ஒன்று கூறுகிறது; இதற்கான பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருப்பதாகவும் தெரிகிறது.

''தமிழ் நாடு' என்று பெயரிடுக!'

'தமிழை ஆட்சி மொழியாக்குக!'

தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் தீர்மானம்

சென்னை, ஏப். 8—

"தமிழ்ப் பகுதிகளைக்கொண்டு புதிதாக உருவாகும் சென்னை மாநிலத்தின் பெயரை தமிழ் நாடு என்று அழைக்க வேண்டும்."

"தமிழை ஆட்சி மொழியாக்கும் விவகாரத்தில் அரசாங்கம் திட்டவட்டமான வழிமுறைகளை வகுத்து, அவற்றை ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் அமுலாக்க வேண்டும்,"

என்று, தமிழ் எழுத்தாளர் சங்கத்தவர், தங்களின் நான்காவது ஆண்டு மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளனர்.

மாநாடு, நேற்று ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது.

அதிர்ச்சி தரும் தேர்தல் முடிவுகள்!

இலங்கை ஆளும் கட்சிக்கு படுதோல்வி

குறிப்பிடத்தகுந்த இரு இடதுசாரிகள் வெற்றி

இலங்கையில் ஆளும் கட்சியாகவிருக்கும் கொத்தலாவலையின் ஐக்கிய தேசியக் கட்சிக்கு, நடைபெற்று வரும் பொதுத் தேர்தலில் பெரும் தோல்வி ஏற்பட்டிருக்கிறது. திரும்பவும் ஆட்சிக்கு வரும் வாய்ப்புகள் அக்கட்சிக்கு அற்றுப் போய்விட்டன.

இரண்டாவது பிரிவாகக் கடந்த 7-ந் தேதியன்று நடைபெற்ற தேர்தலில் ஒரு இடத்தில்கூட ஐக்கிய தேசியக் கட்சிக்கு வெற்றி கிடைக்கவில்லை.

முடிவு அறிவிக்கப்பட்டிருக்கிற மொத்தம் 65 இடங்களில், பண்டாரநாயகா தலைமையில் உள்ள மக்கள் முன்னணிக்கு 42 இடங்கள் கிடைத்துள்ளன.

நவலங்கா சம சமாஜ் கட்சி என்ற டிராட்ஸ்கிய வாதிகளுக்கு 11 இடம் கிடைத்துள்ளது. ஆளும்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, மூன்றாவதாகத் தான் தரப்படுத்தப்பட்டிருக்கிறது. 8 இடங்கள் மட்டுமே கொத்தலாவலையின் அக்கட்சி பெற்றுள்ளது.

கம்யூனிஸ்டுகள் இரண்டு இடத்தையும், சுயேச்சைகள் இரண்டு இடத்தையும் பிடித்துள்ளனர்.

சென்ற தேர்தலில் தோற்றுவிட்ட டாக்டர் எஸ். ஏ. விக்ரமசிங் என்ற கம்யூனிஸ்டு தலைவரும், டாக்டர் கால்வின் ஆர். டி. சில்வா என்ற டிராட்ஸ்கிய வாதியும் வெற்றி பெற்றுள்ள இடதுசாரிகளில் முக்கியமானவர்களாகும்.

இலங்கைத் தேர்தல் முடிவுகள் இங்கிலாந்து, அமெரிக்க நாடுகளில், பெரும் அதிர்ச்சியைத் தந்துள்ளனவாம்!

மதுவிலக்கு அமுலாகும் இலட்சணம்

சொந்தக் கட்சி ஆட்சிக்கு தேபர் தரும் நற்சாட்சிப் பத்திரம்

சூரத், ஏப். 6—

"சில இடங்களில் மதுவிலக்கு வெற்றியளிக்காததற்குக் காரணம், அதை அமுல் நடத்துகின்றவர்களின் நம்பிக்கையில்லாத் தன்மையும், அசிரத்தையுமே யாகும்!"

என்று, மதுவிலக்கு வாரத்தை துவக்கிவைத்துப் பேசுகையில் காங்கிரஸ் தலைவர் யூ. என். தேபர் கூறினார்.

நாட்டில் மது விற்பனை நிறுத்தப்பட்டாலன்றி, இந்தியாவில் மதுவிலக்கு வெற்றி பெறாதென்றும், டில்லி போன்ற மாநகரங்களில் மது விற்பனை ஒழிய வேண்டுமென்றும், இதிலிருந்து கிடைக்கும் வருவாயை தள்ளிவிட பொது மக்கள் ஆயத்தமாயிருக்கையில் [illegible] சியலார் மட்டும் தயங்குசியலானர் [illegible] தெரியவில்லையென் குறிப்பிட்டனர்

எம். எல். ஏ. தலைமையில் விற்பனை வரி எதிர்ப்பு

உ. பி. மாநிலத்தில், விற்பனை வரிக்கு எதிர்ப்பு தெரிவித்து நடத்தப்பட்டுவரும் இயக்கம் சம்மந்தமாக சட்டசபை உறுப்பினரான ராஜ் நாராயண சிங் தலைமையில், ஆறு சோசலிஸ்டு ஊழியர்கள் அடங்கிய குழு ஒன்று கைது செய்யப்பட்டிருக்கிறது. போலீஸ் காவலை மீறி, பூங்கா ஒன்றுக்குள் நுழைய முயன்ற 10 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், இந்தியாவில் உப்பு உற்பத்தி 850 லட்சம் மணங்கிலிருந்து 10 கோடி மணங்களாகப் பெருக்கப்படும்.

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 9—4—'56 திங்கள்

துரோகமுமல்ல-தீமையுமல்ல!

''எல்லோருக்கும் பயன் படும் வகையில் மருத்துவ மனைகள், கல்விக்கூடங் கள் முதலியவற்றுக்கு நிதி உதவ கோயில்கள் பணம் பயன்படுத்தத் தக்கவாறு, சென்னை இந்துமத அற நிலையப் பாதுகாப்புச் சட் டத்தைத் திருத்தி அமைக்க வேண்டும்."

இவ்வாறு கூறியுள்ளவர், ஆலய வழிபாட்டில் நூற்றுக்கு நூறு நம்பிக்கையுடைய—அல் லது நம்பிக்கையுடையவர் எனப் பிறரால் ஒப்புக்கொள் ளும்வகையில் ஆலய வழிபாட் டில் ஈடுபட்டுவருகிற ஒரு அமைச்சராவர்.

அவர், தம்மை அமைச்சர் ஆக்கியதற்காக, திருப்பாதிரிப் புலியூர் தென்னந்தோப்பு அனு மார் மூர்த்திக்கு அபிஷேக ஆராதனைகளை ஆடம்பரமாகச் செய்து, சிவ வணக்கப் பெரு மக்களின் அன்பைப் பெற்று மகிழ்ந்துமிருப்பவராவர்.

அந்த அமைச்சர், இயற்கை எழிலுடன் விளங்கும் கடல் பெரு மணற்பரப்பில் கோயில் கொண்டுள்ள, திருச்செந்தூர் வடிவேலவனை வழிபடச் சென் றுர். அவ்வாலயத்தை நிர்வ கித்துவரும் அறநிலையப் பாது காப்பு அதிகாரிகள், அமைச் சரை ஆடம்பரமாக வரவேற்று, வடிவேலவனின் அருளை அவ ருக்குப் பெற்றுத் தந்ததுடன் நின்றுவிடாது, அக்கோயிலில் மிச்சமாகக் குவிந்திருக்கும் பணத்தை அப்பகுதி அபிவிருத் திப் பணிகளுக்கும், பல்கலைக் கழகம் ஒன்று நிறுவுவதற்கும் செலவிட வேண்டுமெனவும் விண்ணப்பித்துக்கொண்டனர்.

அமைச்சரும், அவ்விண்ணப் பத்திற்குப் பதிலளிக்கும் கட் டாயத்தில், தலைப்பில் குறிப் பிட்டுள்ளது போல் கூறிவிட்டு, கோயில்களில் மிச்சமாகக் கிடைக்கக் கூடிய பணத்தை, வேறு நற்பணிகளுக்குச் செல வழிப்பதற்கு இடமளிக்கக் கூடிய வகையில், விரைவில் அறநிலையச் சட்டம் அரசாங் கத்தால் திருத்தப்படும் எனவும் குறிப்பிட்டார்.

அவ்வளவுதான்—உலக அர சியல் தத்துவங்களை எல்லாம் கரைத்துக் குடித்துவிட்டு, பொருளியல் நுண் கலைகள் அனைத்தையும் உலையிட்டு வேக வைத்து உண்டுவிட்டு, ஜன நாயகக் கோட்பாடுகளை முழு வதையும் அம்மியிலிட்டு அரைத் துத் துவையலாக்கித் தின்று விட்டு, செரிமானிக்கும் தகு தியோ, திறமோ துளியுமின்றி, ஆரிய வைதீகச் சேற்றில் புரண்டுகொண்டு, சமநீதி கோருவோரை சாடி, சம தர்மம பேசுவோரைப் பழித்து, சகோதரத்துவம் நாடுவோரை நிந்தித்து, மக்கள் அனைவருக்கும் அந்த நல்வாழ்வு தேடுவோரை அதைப் பெற்றுத் தர தம் உடல் பொருள், உயிர் மூன்றையும் அர்ப்பித்திடும் அரும்பணியில் ஈடு பட்டிருப்போரை நாத்திகர்கள்-நெருப்புவாதிகள்-தேசத்துரோகி கள்—என, நித்தம் நித்தம் நாத் ... பெற அர்ச்சித்து வருவ ... ரும் இலட்சியமெ ... யாகக் கருதி,

சுயஜாதியின் எதிர்காலப் பாது காப்புக்காக, நெற்றி வியர்வை தொந்தியில் விழுந்துடன் நீர்விழ்ச்சியெனத் தலத்தில் விரைந்தோடும் அளவிற்கு அரும்பணியாற்றிவரும் 'சுதேச மித்திரனு'க்குக் கோபம் பிறந்து விட்டது!

கோயில் பணத்தை, ஆலயத் திருப்பணிகளுக்கு நீங்கலாக, வேறு எப்பணிக்கும் செலவிடு வது கூடாது; அது கோயில் களுக்குப் பெரும் செல்வத் தைத் தந்துள்ளவர்களுக்குத் துரோகம் செய்வதாகும என வாதிடக் கிளம்பிவிட்டது.

அது கிளப்பும் வாதம் ஊற் றுக்கு நிற்காது — பொருந் தாது. கோயில் சொத்துக்களை மக்களின் நல்வாழ்விற்குச் செலவிடுவது, அச்சொத்துக் களைக் கோயில்களுக்குக் கொடுத்துள்ளவர்களுக்குத் துரோகம் செய்வதாகும் என, 'சுதேசமித்திரன்' கூறும் கார ணம், அது கிளப்பும் எதிர்ப்பை நியாயமானது என மெய்ப்பிக் கவும் உதவாது.

வைதிக நோக்கிலும் சரி, அறிவுடைமைக் கருத்திலும் சரி, கோயில் சொத்துக்களை மக்களின் நல்வாழ்வுக்குச் செல விடுவது, காலத்தினுல் மட் டுமல்லாது, எக்காலத்திற்கும் ஒப்புக்கொள்ளக்கூடிய உயர் கருத்து—நியாயமேயாகும்.

மனித வரலாற்றில், அறிவு நிலை வளர்ச்சியில், சிலை வணக் கம் குறிப்பிட்ட ஒரு காலக் கட் டத்தைக் குறிப்பிடுவதாகும். அந்தக் கட்டம் மறைந்து முன் னூறு ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. எனவே, கடவுள் வழிபாட்டிற்குச் சிலை வணக் கத்தை இந்த நாட்டில் மட்டும் இந்தக் காலத்திலும் கட்டிக் கொண்டு அழுவது, அறி வுடைமையாகாது என்ற வர லாற்றுப் பகுத்தறிவு வாதத்தை நாம், அவ்வேட்டிற்கு, பதிலா கக் கூற விரும்பவில்லை. கார ணம், அவ்வாதத்தைத்தானே, அந்த ஏட்டின் நாகரீக வைதி கர்கள் 'நாத்திகம்' எனப் பழித்து வருகிருர்கள்! நிற்க,

கோயில்களில் மிஞ்சி இருக் கும் செல்வத்தை நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்குச் செலவிடவேண்டும் என்பது வழக்கு.

இச்சொல் கோயில்களுக்குச் சொத்துக்களைத் தந்தவர்களுக் குச் செய்யும் துரோகமாகும் என்பது எதிர்வழக்கு.-'சுதேச மித்திரன்' கூறுவது!

ஆலயங்களின் இன்றியமை யாத் திருப்பணிகளுக்குச் செலவழிந்தது போக மிஞ்சிக் கிடக்கும் செல்வத்தை, நெய் வேலி பழுப்பு நிலக்கரியில் கலந்துள்ள சில மூலப்பொருட் களைத் தனித் தனியாகக் கொண்டு, மக்களுக்கு இன்றி யமையாது பயன்படும் பொருள்களை உற்பத்திச் செய் வதற்குப் பற்பல விதத் தொழிற்சாலைகளைத் துவங்கு வதில் பயன்படுத்துவதாக வைத்துக்கொள்வோம். அத் தொழில் வளர்ச்சியுற யுற, மக்களின் நல்வாழ்வு விரிந்து வளம் பெறுவதுடன் பெருத்த இலாபம் ஏற்படுவதற் கும் இடமேற்படுகிறது. அப் பெரும் இலாபத்தில், அத் தொழிலின் மூலதனத்துக்காக கோயில் சொத்திலிருந்து ஈடு படுத்தப்பட்ட பகுதிக்குரிய இலாப விதமும், வட்டித் தொகையும் கிடைப்பது சாத் தியமாகின்றன.

மூலதனமும் அப்படியே இருக்கிறது. அத்துடன் குறிப் பிட்ட தொழில்மூலம் கிடைத்த இலாபமும், வட்டியும்கூடி மூல தனம் பெருக்கடைகிறது. மூல தனத்தைப் பெருக்க விரும்ப வில்லையானல் தொழில் மூலம் கிடைத்த வருவாயைக் கொண்டு, ஆலயத் திருப்பணி களை முன்னிலும் கூடுதலாக வும், சிறப்பாகவும் செய்வது சாத்தியமாகும். எனவே இச் சிறந்த ஏற்பாடு, எந்த வகையி லும், கோயில்களுக்குச் சொத்து விட்டிருப்பவர்களின் நோக்கத்திற்குத் துரோக மிழைத்ததாக ஆகாது—ஆலய வழிபாட்டிற்குத் தீமை பயப்ப தாகவும் ஆகாது.

முடங்கிக் கிடக்கும் சொத்து உண்மையான செல்வமாகாது. தேங்கிக் கிடக்கும் பணத் துக்கு மதிப்பு கிடையாது. அவை மூலதனமாக மாற்றப் பட்டு பெருக்கப்படுவதிலிருந்து தான், அவைகளுக்கு மதிப்பு ஏற்படுகிறது என்ற உண்மை யைக் கற்றிருக்கின்ற 'சுதேச மித்திரன்' இன்னும் கோயில் சொத்துக்களை நாட்டின் அபி விருத்திகளுக்குச் செலவிடக் கூடாது; அப்போக்கு சொத்தை எழுதி வைத்தவர் களுக்குத் துரோகம் செய்வதா கும் என, இந்தக் காலத்திலும் நாகரீக வைதிகம் பேசிவருவது விந்தையாகவும் இருக்கிறது— வேதனையாகவும் இருக்கிறது!

எல்லைக் கோரிக்கைகள்:

'தீர்ந்துவிட்டது' எனப் பேசும் தாசர்கள்

தீர்த்துவைக்க எல்லைக்குழு கோரும் ஆந்திரரைக் காணட்டும்!

'பெல்லாரி, பர்லாகிமிடி பகுதிகள் வேண்டுமெனக் கோரிக்கை'

'ஆந்திர பிரதேசம்' என்ற பெயர் மாற்றம் தேவை'

டெல்லியின் மசோதாவுக்கு ஆந்திர சட்டசபை திருத்தங்கள்

'தேவிகுளம், பீர்மேடா? அதுதான் தீர்ந்துவிட்ட பிரச் சினையாயிற்றே' என்று பேசுகிருர்களே — மந்திரிகள் என்ற பெயரோடு இங்கு உலவும், தாசர் புத்தி தலைக்கேறிய தருக்கர் சிலர்—அவர்களுக்கு, 'எல்லைத் தகராறுகள் தீர்ந்துவிட்டதாகக் கொள்ளமாட்டோம்' என்று குரல் கொடுத்திருக்கும் ஆந்திர சட்டசபையினர், கன்னத்தில் அறைவதுபோல பதில் தந்திருக் கின்றனர்!

'தமிழ் நாடா? ஏன் 'மதராஸ்' என்ற பெயரை மாற்ற வேண்டும்?'—என்று கேலி பேசுகிற மானமிமானமிழந்த மனித உருவில் உலவும் மாமிசப் பிண்டங்களுக்கு, தாயகப் பற்று இன்னதென்பதையும் கற்றுத் தருகின்றனர், மீண்டுமோர் முறை ஆந்திர சகோதரர்கள்!

ஆந்திர மாநில அமைப்பைப் பொறுத்து, மாநிலப் புது அமைப்பு மசோதாவை சில திருத்தங்களுடன் ஆந்திர சட்டசபை நிறைவேற்றி யுள்ளது.

'மாநில புது அமைப்புக் குழு சிபாரிசு செய்தபடி, பெல்லாரி மாவட்டத்தின் சில பகுதிகளை ஆந் திரத்துடன் இணைக்க வேண்டும்; இதற்கொப்ப மசோதாவைத் திருத்த வேண்டும்' என்பது ஒரு திருத்தம்.

'ஒரிசா மாநிலத்தில் உள்ள பர் லாகிமிடி பகுதி ஆந்திரத்திற்கு வேண்டும்' என்பது மற்றொரு திருத்தம்.

இந்த இரண்டு பிரதேசக் கோரிக் கைகளையும் காங்கிரஸ் உறுப்பினர் களே சட்டசபையில் பிரரேபித்து, எதிர்ப்பின்றி நிறைவேற்றியுள்ள னர்.

'ஆந்திரா-தெலிங்கானு' என்று புதிய மாநிலத்தின் பெயர் இருக் கும் என்று டெல்லி, தனது மசோ தாவில் கூறுகிறது. ஆனுல், அந் தப் பெயரை 'ஆந்திரப் பிரதேசம்' என்று மாற்றியமைக்க வேண்டும் என்று முதன் மந்திரி கோபால ரெட்டியாரே திருத்தத் தீர்மானம் கொண்டுவந்து, ஒருமனதாக நிறை வேற்றியுள்ளார்.

சென்னையிலும் ஒரு முதன் மந் திரி இருக்கிருரே—'பச்சைத் தமிழர்' என்ற பட்டப் பெய ருடன்—அவருக்கு, கோபால ரெட்டியாரின் தீர்மானமேனும் புத்தி தரவேண்டும்.

மேலும், முதன் மந்திரி கோபால ரெட்டியாரே வேறு ஒரு திருத்தத் தீர்மானமும் கொண்டு வந்திருக்கி ருர். அதாவது, 'ஆந்திராவிற்கும் —சென்னை, மைசூர், ஒரிசா, மத் திய பிரதேசம், மராட்டியம் ஆகிய அண்டை மாநிலங்களுக்குமிடை யில் உள்ள எல்லைத் தகராறுகளைத் தீர்த்து வைக்க, டெல்லி சர்க் கார் உடனடியாக ஒன்று, அதற்கு மேற்பட்ட எல்லைக் குழுக்களை நிய மிக்க வேண்டும்' என்று அந்தத் தீர்மானம் கோருகிறது.

'தேவிகுளம்--பீர்மேடு பிரச்னை தீர்ந்து விட்டது' என்று பேசுகிற மாமிசப் பிண்டங்கள், இந்தத் தீர் மானத்தை உற்று நோக்க வேண் டும்; அப்போதாவது, உணர்ச்சி வருகிறதா பார்க்கலாம். அல்லது, 'எத்தனை மழை பெய்தால்தான் என்ன? எங்களுக்கு உறைக்காது, என்று இருந்துவிடப் போகின்ற னவோ என்னவோ தெரியவில்லை, இந்தச் சடங்கள்!

நெய்வேலியிலா 'பல தொழில் நிலையம்' நிறுவப்படும்?

'பரிசோதனை'கள் பலனளிக்கிறதாம்!

புதுடில்லி, ஏப். 6—

நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டம் முன்னேறி வருகிறது என் றும், விரைவிலேயே நிலக்கரி வெட்டி எடுக்கப்படும் என்றும் மத்திய உற்பத்தி இலாகா துணை அமைச்சர் மக்களவையில் தெரி வித்துவிட்டு மேலும் சொன்னர்:-

"பரிசோதனைகளின் பலன் மிக வும் உற்சாகமூட்டுவதாக இருக் கிறது. மின்சார உற்பத்தி, வீடு களிலும், ஆலைகளிலும் எரிபொரு ளாகப் பயன்பட பழுப்பு நிலக்கரிப் பாளங்கள் வார்த்தல், இரசாயன உரஉற்பத்தி, சில துணைப்பொருள் தொழில்கள் மேற்கொள்ளல் ஆகிய இன்னபிற செயல்களுக்காக 'பல தொழில் நிலையம்' ஒன்று நிறுவப் படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

"நெய்வேலித் திட்டம் நிறை வேறினுல் 80,000 டன் 'நைட் ரஜன்' உர உற்பத்தி செய்யக் கூடிய ஒரு தொழிலகம் நெய்வேலி யிலேயே நிறுவப்படலாம்.

"நெய்வேலியில் நடைபெறும் நடைமுறைச் சோதனைகளில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட் டுள்ளது. 16மிகப்பெரியகுழாய்கள் அங்கு நிமிடத்திற்கு சுமார் 18,000 'காலன்' தண்ணீரை வெளியேற்று கின்றன. இது நீரின் வேகத்தை யும், மட்டத்தையும் கணிசமான அளவுக்குக் குறைத்துள்ளது; மேலும் சில குழாய்கள் தேவை; அவை விரைவிலேயே வந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

"சரிக்கட்டக்கூடிய செலவில் பழுப்பு நிலக்கரி வெட்டி எடுக்க முடியுமென உறுதியாகிவிட்டமை யால் 'பல தொழில் நிலையம்' ஒன்று அங்கு நிறுவலாமென நம்பு கிறேன்."

ஐதராபாத் மாநிலத்தில் உயர்தர இரும்புக் கனிகள்

உருக்குத் தொழில் துவங்க வாய்ப்பு

ஐதராபாத் மாநிலத்தில் கம்மாமத் வாரங்கல் மாவட்டங்களில் ஏரா ளமான இரும்புக் கனிச் செல் வம் கிடைப்பதாகக் கண்டுபிடிக் கப்பட்டிருக்கிறது.

சுமார் 60 சதவிகிதம் இரும்புக் கனியுள்ள படிவங்கள் பெரும் அளவில் கிடைப்பதாகத் தெரிய வருகிறது.

இங்கு இந்த உயர்தர இரும்புக் கனி கிடைப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதால் இந்த் பிரதேசத்தில் ஒரு இரும்பு உருக்குத் தொழிற்சாலை துவங் குகிற வாய்ப்புகள் அதிகரித் திருக்கின்றன.

இது மட்டுமின்றி சற்று தரக் குறைவான இரும்புக் கனிகள், மாநிலத்தில் அடிலாபாத், கரீம் நகர், வாரங்கல், ரெய்ச்சூர், கம்மாமத் பகுதிகளில் கிடைப் பதாகவும் ஏற்கனவே காணப் பட்டிருக்கிறது.

மலாயா கம்யூனிஸ்டு தீவிரவாதி களை அடக்குவதற்கு தம்மிடம் ஒரு 'இரகசிய ஆயுதம்' இருப்பதாக மலாயா முதன் மந்திரி தெங்கு அப்துல் ரெஹ்மான் குறிப்பிட் டிருக்கிருர்.

கப்பல் போக்குவரத்து ஆரம்பமாகிறது

இந்தியா—ரஷ்யா ஒப்பந்தம்

புதுடில்லி, ஏப். 6—

இந்தியாவுக்கும்—சோவியத் ரஷ்யாவுக்குமிடையே கப்பல் போக்குவரத்து சம்மந்தமாக ஒப் பந்தமொன்று கையெழுத்தாகியுள் ளது.

இந்த ஒப்பந்தப்படி, மொத்தம் 55,000 டன் எடையுள்ள ஆறு கப்பல்களை ஒவ்வொரு தரப்பின ரும் ஒதுக்குவர்.

இந்தக் கப்பல்கள், இரு நாடு களுக்குமிடையே வியாபாரப் போக்குவரத்துக்கும், பொருளா தார ஒத்துழைப்புக்கும் உதவி செய்யும்.

'எசமானர்'களைக் காப்பாற்றுவதில் காமராசர் தோல்வி!

உண்மையை ஒப்புகிறார் — உள் நோக்கத்தை அம்பலமாக்குவாரா?

திராவிடரை வடவர் வஞ்சிப்பதேன்?

காமராசர்—நமது மாநில முதன் மந்திரி—வடநாட்டவருக்குத் தென்னாட்டில் கிடைத்திருக்கும் முதல்தரமான கட்டியக்காரர்—ஒரு உண்மையை, தவிர்க்கமுடியாத நிலையில் ஒப்புக்கொண்டிருக்கிற நிகழ்ச்சி சென்னையில் நடைபெற்றிருக்கிறது.

தென்னிந்திய வர்த்தகக் கழகக் கூட்டத்தில், இந்த மகானுபாவரை முன்வைத்துக்கொண்டு, தொழில்துறையில் தென்னாட்டிற்கு வடவர் இழைத்துவரும் அநீதியை, கழகத் தலைவர் எம். ஏ. சிதம்பரம் விளக்கியிருக்கிறார்.

அதுபோது பேசிய காமராசர், வடவரின் அநீதியை, ஒப்புக்கொண்டிருக்கிறார்.

"சென்னையைப் பொறுத்த வரையில், தொழில்துறை அபிவிருத்தியை துரிதப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கத்தான் செய்கிறது."

"இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், 'சென்னை' மாநிலத்தில், எந்த ஒரு பெரும் தொழிலும் துவங்க உத்தேசிக்கப்படவில்லை என்பது உண்மைதான்."

"சென்னை சர்க்கார் தங்களால், முடிந்தவரையில், டில்லி சர்க்காரை வற்புறுத்தி வருகின்றனர்— ஏதேனும் பெருந்தொழிலை இங்கு துவங்குமாறு!"

என்று பேசியிருக்கிறார் காமராசர்!

தொடர்ந்து அவர் கூறியிருக்க வேண்டும் — 'ஆனால், நாங்கள் எவ்வளவுதான் கெஞ்சினாலும், எங்கள் வடநாட்டு எஜமானர்கள், எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றவில்லை'— என்று! கூறவில்லை. அவர் கூறாவிட்டாலும், நடைமுறை, அப்படிக் கூறிக்கொண்டிருக்கிறது.

ஆனால் காமராசர் கருதுகிறார் — அந்த வாசகங்களைக் கூறாததினாலேயே தனது வடநாட்டு எஜமானர்களின் வஞ்சனையை, இருளில் அமிழ்த்தி மறைத்துவிட்டுக் காப்பாற்றிவிடலாம்—என்று! பாவம், காமராசர்! உண்மை, அவரைக் கொல்கிறது! பதவி அவரை பல்லிளிக்கச் சொல்கிறது!

அவர் என்ன செய்வார்? தனது கையாலாகாததனத்தை முதுகெலும்பற்ற நிலையை, தன்மானம் மறந்த போக்கை, தாயகப் பற்றற்ற அடிமைப் புத்தியை இன்னும் எப்படித்தான் வெளிக்காட்டுவார்?

திருக்குறள் ஓவியப் பரிசு

மதுரை, ஏப். 4—

நேற்று இரவு திரு. பி. டி. இராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன் விழாக் குழுக் கூட்டத்தில், மே மாதம் 30-ந் தேதி முதல் ஜுன் 5-ந் தேதிவரை நடைபெற இருக்கும் பொன் விழாவை ஒட்டி ஓவியக் கண்காட்சி ஒன்று நடத்தவும், சென்னை கவர்னர் பிரகாசா அவர்களை அக்கண்காட்சியைத் திறந்துவைக்கவும் அழைக்க முடிவு செய்யப்பெற்றது.

கண்காட்சியில், திருக்குறளில் யாதேனும் ஒரு பாட்டின் கருத்தைச் சித்திரிக்கும் ஓவியங்களே இடம் பெறும்.

வந்துள்ள ஓவியங்களில் சிறந்தவைக்கு முதல் பரிசு ரூ. 200-ம், இரண்டாம் பரிசு ரூ. 100-ம், மூன்றாம் பரிசு ரூ. 50-ம் வழங்க முடிவு செய்யப்பெற்றது. ஒருவர் எத்தனை ஓவியங்கள் வேண்டுமென்றாலும் அனுப்பலாம் என்று செயலாளர் கி. பழநியப்பன் தெரிவிக்கிறார்.

வடக்கே வளர்ந்துள்ள திட்டங்கள்

சோழவந்தானில் மதியழகன் விளக்கம்

"நேற்று இரவோடு, டில்லி ஏகாதிபத்யம், வடநாட்டைச் செல்வச் சீமையாக்கும் முதல் ஐந்தாண்டுத் திட்டம் எனும் ஓர் குறிப்பிட்ட கட்டத்தை முடித்துக்கொண்டு, இன்று வேறோர் கட்டத்திற்கு பயணம் துவங்கியுள்ளது. இந்த ஐந்து ஆண்டுகளிலும் வடக்கு வளர்ந்துள்ள நிலையையும், வளமார் திராவிடம் வறுமைக் காடாக்கப்பட்டுள்ள 'கொலை'யையும் நடுநிலையில் சிந்திக்கும் எவரும் நமது நியாயத்தை ஒத்துக்கொள்வர். கடந்த ஐந்து ஆண்டுகளில் வடக்கே எழுந்துள்ள பிரமாண்ட அணைக்கட்டுகள், நீர்த்தேக்கத் திட்டங்கள், மின்சார நிலையங்களை மனக் கண்முன் கொண்டுவந்து பாருங்கள்.

"தாமோதர், பக்ரா—நங்கல், ஹிராகுட், கோசி, கொய்னா, சாம்பல், ரீஹண்ட்—இப்படி திட்டங்கள், 300, 200, 150, 80, 60 கோடி என்ற அளவில்!

"இங்கேயும் சில திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. மலம்புழா, மணிமுத்தாறு, வைகை, அமராவதி, சாத்தனூர். ஆரணியார், என்று இவைகளில் பெரிய திட்டத்திற்கே செலவு ரூ. 3½ கோடிக்கு மேல் இல்லை!

"இவையெல்லாம், சிறு நீர்ப்பாசனத் திட்டம்! வடக்கே நிறைவேற்றப்பட்டுள்ளவைகளோ பல நோக்குத் திட்டம்!

"நீர்ப்பாசனமட்டுமல்ல; மின்சார நிலையங்களும், தொழிலாலைகளும் கப்பல் போக்குவரத்தும் நடைபெறும் ஒரு 'தாமோதர்' என்றால் 20 'காவிரி' என்று பொருள். ஒரு பக்ரா—நங்கல்' என்றால், 50 'தாமிரவருணி' என்று பொருள்.

"ஆசியாவிலேயே மிகப்பெரிய இரசாயன எரு உற்பத்திச் சாலையை 25 கோடி ரூபாயில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இடம் சிந்திரி—வடநாடு!

"இரயில்வே எஞ்சின் தயாரிக்கும் இடம் சித்தரஞ்சன்—வடநாடு!

"'பெனிசிலின்' மருந்து தயாரிக்கும் இடம் பிம்ப்ரி—வடநாடு!

"பெரும் ஆய்வுக்கூடங்கள் முழுவதும் வடநாட்டில்தான். வருகிற ஐந்தாண்டுத் திட்டத்தில் 14 எஞ்சினீரியங் கல்லூரிகள் நிறுவப்படுமாம். அவை அத்தனையும் அங்கேதான்!

எஃகுத் தொழிற்சாலை மூன்று உதயமாகியது இந்தத் திட்டத்தில்; ரஷ்யர் உதவியோடு கூடிய எஃகு தொழிற்சாலை பிலாய் என்ற மத்திய பிரதேசத்தில்—வடநாட்டில்!

"ஜெர்மனி உதவியோடு கூடிய தொற்சாலை ரூர்கேலா என்ற இடத்தில் — ஒரிசாவில் — வடநாட்டில்!

"பிரிட்டிஷ் உதவியோடு கூடிய ஆலை துர்க்காபூர் என்ற இடத்தில் — வங்கத்தில் — வடநாட்டில்!

"தென்னாட்டில் என்ன-என்று கேட்காதீர். இங்கேதான் பத்து வருடமாகப் பரீட்சார்த்த திட்டம் நடைபெறுகிறதே, நெய்வேலியில்! அதுபோதாதா! அதுவே பெரும் வரப்பிரசாதமாயிற்றே!

"அங்கேதான் மூலப்பொருள் இரும்பு இருந்தது — என்ற சொத்தை வாதத்தை நீட்டுவர்; ஆனால், மூன்று பக்கமும் கடல் சூழ்ந்த துறைமுகப் பட்டினங்கள் வளர வழிவகை செய்யப்பட்டதா? செய்யப்பட்டது! ஆனால், இங்கல்ல—வடக்கே, கண்ட்லா எனும் புதிய துறைமுகமே ரூ. 25 கோடியில் எழும்பியுள்ளது.

"அகதிகள் என்ற பேரால் இங்கே புகுந்தவர்களுக்கு ரூ. 200 கோடிக்குமேல் ஐந்தாண்டுத் திட்ட செலவில் பத்தில் ஒரு பகுதி விரயமாக்கப்பட்டுள்ளது.

இன்னும் அந்த விரயம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்துகொண்டுள்ளது. "நமது தலைவர்களோ 'முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் அற்புதம் பாரீர்'—என்று ஆனந்தப் பள்ளு, பாடுகின்றனர். அந்த ஆனந்தப்பள்ளு, அவர்களின் எஜமானர்களுக்கு அற்ப சந்தோஷத்தை சில நிமிடம் அளிக்கலாம்; ஆனால், இங்கு நிரந்தரமாக ஒரு பெரும் மக்கட் சமுதாயம் நடைப்பிணமாக ஆக்கப்படும் கோர விளைவுகளுக்குக் காரணஸ்தர்கள் என்று எதிர்காலம் சாட்ட இருக்கும் குற்றச் சாட்டிலிருந்து அவர்கள் தப்ப முடியாது"

என்று தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள், 1-4-56 மாலை 6 மணியளவில், சோழவந்தான் தி. மு. கழகச் சார்பில், வைகையாற்று மணலில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு மதுரை மாவட்ட தி. மு. க. துணைச்செயலாளர் தா. ஆவுடையப்பன் தலைமை வகித்தார்.

தோழர்கள் மதுரை பாண்டியன், செங்குட்டுவன், கூ. குருசாமி, மா. வேலன் ஆகியோர் பேசிய பிறகு தோழர் கே. ஏ. மதியழகன் நீண்டநேரம் விரிவுரையாற்றினார்.

சென்னை அமைச்சரவை பிடிவாதம்

சர்க்கரை வரியை உயர்த்த முடிவு

சென்னை, ஏப். 6—

விற்பனை வரி இரண்டாவது திருத்த மசோதாவை மேல் (சட்ட) சபை நிறைவேற்றியது. சென்னை மாநிலத்தில், சர்க்கரை முதல் விற்பனைக் கட்டத்தில் ரூபாய்க்கு 1 அணா வீதம் வரி விதிப்பதுதான் இத்திருத்த மசோதாவின் நோக்கம்.

இவ்வரி விதிப்பு பொதுமக்களுக்கு மிக்க கஷ்டத்தைத் தரும் என்றும், பொதுமக்களின் வாங்கும் சக்தியை போக்கிவிடும் என்றும் உறுப்பினர்கள் பலர் எடுத்துரைத்தனர்.

"மதுவிலக்கு அமுலுக்கு வந்த பின்னர் ஏழைகள் சர்க்கரையை அதிகமாகப் பயன்படுத்துவதாகவும், எனவே, இவ்வரி அவர்களுக்கு மிக்கத் துன்பத்தைத் தரும் என்றும் தோழர் ஜெஜபதி (நாயக்கர்) குறிப்பிட்டார்.

வரி விதிப்பை எதிர்த்தவர்களுக்குப் பதிலளித்து அமைச்சர் பேசுகையில் சொன்னார்:—

"இந்த வரி விதிப்பு பொது மக்களில் எல்லாப் பகுதியினரையும் பாதிக்கும் என்பதை ஒப்புகிறேன்; ஆனால் ஏழை மக்கள் வெல்லத்தை யாவது, பழுப்புச் சர்க்கரையை யாவது பயன்படுத்திக் கொள்ளலாம். வெல்லமும், பழுப்புச் சர்க்கரையும் வெள்ளை சர்க்கரையை விட 'சத்து' நிரம்பப்பெற்றது சில உறுப்பினர்கள் தெரிவித்தது போல் இவ்வரி அத்தகு கஷ்டத்தை உண்டாக்காது. அரசியலார் தங்கள் பொறுப்பை உணர்ந்தும், பல்வேறுப் பொருட்களுக்கு விற்பனை வரியிலிருந்து விதிவிலக்கு வழங்கியுள்ளதால் ஆண்டொன்றுக்கு ரூ. 25 இலட்சம் நஷ்டம் அடைவதைக் கருதியும் இந்த வரியை விதிக்க வேண்டிய இன்றியமையாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது."

கழகச் செய்திகள்

கொணவட்டம்—வேலூர் தி. மு. க. திறப்பு விழா

1-4-56 மாலை 4 மணிக்கு, வேலூர் டவுன் ஹாலில், கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் தோழர் சி. பி. சிற்றரசு தலைமையில் நடைபெற்றது. பல தோழர்கள் கருத்தறிவித்த பின்னர், தோழர் சிற்றரசு அவர்கள் கழக ஆக்கவேலைகள் குறித்தும், உறுப்பினர்கள் செயல் முறைகள் பற்றியும் விளக்கமளித்தார்.

மாலை 6 மணிக்கு வேலூர் அடுத்த கொணவட்டத்தில் தி. மு. க. திறப்பு விழாப் பொதுக்கூட்டம் தோழர் மா. பா. சாரதி தலைமையில் நடைபெற்றது. கழகப் பணிமனையைத் திறந்துவைத்து தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் கழகக் கொள்கைகள் பற்றி விரிவுரை யாற்றினார். தோழர்கள் திராவிடமணி, கே. ஆர். குமார், அ. கருத்தோவியன் ஆகியோர் பேசினர்.

அக்கரை வட்டம் தி. மு. கழக ஆண்டு விழா

1-4-56-ல் கழக இரண்டாவது ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது. மாபெரும் ஊர்வலம் ஒன்று புறப்பட்டு, முக்கிய வீதிகளின் வழியே வந்து, காளியம்மன் கோவில் திடலை வந்தடைந்தது. அங்கு நடைபெற்ற கூட்டத்திற்கு தோழர் ப. அ. கரீம் தலைமை தாங்கினார் தோழர்கள் கா. இராமசாமி, இரத்தினவேலு, ஜம்பு, தோழியர் அருண்மொழி ஆகியோர் கழகக் கொள்கைள் பற்றி விரிவுரை யாற்றினர்.

பட்டிவீரன்பட்டியில் தி. மு. க. பொதுக்கூட்டம்

31-3-56 மாலை 6 மணிக்கு பட்டிவீரன் பட்டி தி. மு கழகச் சார்பில், பாண்டியனார் மைதானத்தில், தோழர் டி. வி. எஸ். நடராசன் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள் காசிராசன், பாஸ்கரன், டி. ராமச்சந்திரன், டி. என். எஸ். மீனாட்சிசுந்தரம், கே. நடராசன் ஆகியோர் பேசிய பிறகு; மதுரை கே. எஸ். சந்தானம். கே. ஏ. மதியழகன் ஆகியோர் பேசினர் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது.

பேரையூரில் தி. மு. கழகத் துவக்க விழா

பொதுக்கூட்டத்தில் ஈ. வெ. கி. சம்பத் விளக்கவுரை

பெருந் தொல்லைகளுக்கும், எதிர்ப்புகளுக்குமிடையில், பேரையூரில் தி. மு. கழகக்கிளை நிறுவப் பெற்றுவிட்டது.

4-4-56 இரவு 7 மணியளவில், பெருமாள் கோயில் முன்பு, 70-வது நிரம்பப் பெற்ற முது கிழவர் பெரியார் பெருமாள் அவர்கள் தலைமையில், கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. செயலாளர் அனீபா அனைவரையும் வரவேற்றுப் பேசினார். பின்னர், தோழர்கள் இராசாக், முத்து, நடிகமணி டி. வி. நாராயணசாமி ஆகியோர் கழகக் கொள்கைள் குறித்துப்பேசினர்.

பின்னர், தோழர் ஈ. வி. கி. சம்பத் அவர்கள், சரித்திரச் சான்றுகள் பல கூறி விரிவுரையாற்றினார். திராவிடம் பிரியத்தான் வேண்டுமென அழுத்தந்திருத்தமாக அவர் கூறியபோது, கூடியிருந்த மக்கள் ஆரவாரப் பேரொலியெழுப்பினர்.

விளாப்பாக்கம் தி. மு. க.

2—4—56 மாலை 7 மணியளவில், பெண் பாடசாலை வெளிப்புறத்தில், கழக உறுப்பினர் கூட்டம் நடைபெற்றபோது, மாதமிருமுறை சொற்பயிற்சிக் கூட்டமும், திருக்குறள் வகுப்பும் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

பாண்டியூர் தி. மு. கழகம்

பாண்டியூர் தி. மு. கிளைக் கழகச் சார்பில், அண்ணா திடலில் தோழர் கே. ஆர். எஸ். மணியன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சே. சேது, இரா. வேலன், இரா. நடராசன் ஆகியோர் கழக இலட்சியங்கள் பற்றிப்பேசினர்.

பெயர் சூட்டல்

2—4—56 இரவு 10-30 மணியளவில், திருமங்கலம் வட்டம், கரிசல்பட்டி தோழர் சங்கரலிங்கம் அவர்களின் குமாரனுக்குப் பெயர் சூட்டு விழா, தோழர் எம். ஏ. இரசாக் தலைமையில் நடைபெற்றது. தலைவர், குழந்தைக்கு 'அதிகமான்' எனப் பெயர் சூட்டி, மோதிரமொன்று பரிசளித்தார்; பின்னர், ஏராளமான பரிசுகள் குழந்தைக்கு வழங்கப்பட்டது. தோழர் உசிலை அட்சயன் வாழ்த்துரை வழங்குகையில் கழக இலட்சிய விளக்கம் பற்றிப் பேசினார். இதன் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பு அனுப்பப் பட்டது—வரப் பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

நன்றியறிவிப்பு

"23—10—55 மாலை செம்பியம் தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானத்திற்கிணங்க, மற்றோர் வட்டத்திற்கு மாற்றப்பட்ட பிரசவ விடுதி படுக்கைகள் மீண்டும் பழையபடி, 1-4-56 முதல் 20-வது வட்டத்தில் கொண்டுவந்தமைக்கு நகராண்மைக் கழக அதிகாரிகளுக்கும், குறிப்பாக 'கமிஷனர்' அவர்களுக்கும் இம்முயற்சியில் வெற்றி பெற பேருதவியாக இருந்த நகராண்மைக் கழக உறுப்பினர்கள் தோழர் ஆண்டியப்பன், தோழர் முனுசாமி அவர்களுக்கும் பொது மக்கள் சார்பில், 20-வது வட்ட தி. மு. கழகம் தனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறது," என்று செயலாளர் அறிவிக்கிறார்.

கொதிக்கும் நெஞ்சைக் குளிர வைக்கவா?

உறுதிமொழிகள் தருவது போதுமா?

சேலத்தில் இரும்பு, அலுமினியத் தொழிற்சாலைகளாம்!

தென்னாட்டவரை சாந்தப்படுத்த கே. சி. ரெட்டி முயற்சி!

சேலம், ஏப். 7—

'சேலத்திலா இரும்புத் தொழிற்சாலை?' என்று வடவரின் எடுபிடிகள் கேலி பேசியதால் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள கொதிப்பைத் தணிக்க, வேறொரு 'எடுபிடி'யாளர், 'சேலத்திலும் ஒரு இரும்புத் தொழிற்சாலை அமைப்பது பற்றி டெல்லி தீவிரமாக யோசித்துக்கொண்டிருக்கிறது' என்று, குரலில் கனிவைக் குழைத்துப் பேசியிருக்கிறார்.

டெல்லி சர்க்காரின் உற்பத்தி இலாகா மந்திரியான கே. சி. ரெட்டி என்ற கன்னடக்காரர்தான் அந்தத் தகவலைத் தந்திருப்பவர்.

சேலம் வந்துள்ள அவருக்கு, வர்த்தகர்கள் தந்த வரவேற்புக்குப் பதிலளிக்கையில் அவர் குறிப்பிட்டதாவது :—

"சேலம்—கஞ்சமலை இரும்புக் கனிகள், 45 சதவிகிதம் மட்டுமே இரும்புச் சத்துக் கொண்டவையாயிருப்பினும், அவற்றைப் பயன்படுத்த முடியும். இதைக் காட்டிலும் குறைவான இரும்புச் சத்துடையக் கனிகளைக்கூட ஜெர்மனி, இங்கிலாந்து போன்ற நாடுகளில் பயன்படுத்துகிறார்கள். எனவே, எனது சொந்த சார்பிலும், டெல்லி சர்க்கார் சார்பிலும் உங்களுக்கு நான் உறுதி கூறுகிறேன்—'சேலம் கனிகளைப் பயன்படுத்தும் தொழிற்சாலை துவக்குவோம்'—என்று.

"சென்னை சர்க்கார் எங்களை வற்புறுத்தி வருகின்றனர்—இடைவிடாது, இதுகுறித்து! எனது சகாவான டி. டி. கிருஷ்ணமாச்சாரியும், நானும் இதில் ஒத்த கருத்துடையவர்களாயிருக்கிறோம்.

"இங்கு ஒரு இரும்புத் தொழிற்சாலை முன்பே அமைந்திருக்கக் கூடும்; ஆனால், நிலக்கரி தூரதேசமான வடநாட்டிலிருந்து கொண்டுவரப்பட வேண்டியிருந்திருக்கும். ஆனால், நெய்வேலி நிலக்கரிப் பரிசோதனைகள் இப்போது வெற்றி பெற்று வருகின்றன என்பதால், புதிய நம்பிக்கை ஏற்படுகிறது. நெய்வேலி நிலக்கரி, மின்சார உற்பத்திக்கு மட்டுமின்றி வேறு பல காரியங்களுக்கும், தொழில்கள் துவக்குவதற்கும் பயன்படக் கூடியதாகும்.

'எனவே, அதைக்கொண்டு சேலத்தில், ஒரு நியாயமான அளவு பெரிய இரும்புத் தொழிற்சாலை அமைக்க, சர்க்கார் காலங்கடத்தாது.

"மேலும், சேர்வராயன் மலையில் கிடைக்கும் 'பாக்சைட்'டை உபயோகித்து ஆண்டொன்றுக்கு 10,000 டன், அலுமினியம் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை துவக்குவது பற்றியும் டில்லி சர்க்கார் தீவிரமாக யோசித்து வருகின்றனர்.

'சேலத்தில் அலுமினியம் தொழிற்சாலை வேண்டுமென்பதும் வெகு நியாயமானதே"

என்றெல்லாம், அந்த மந்திரி இனிக்க இனிக்கப் பேசியிருக்கிறார், வர்த்தகப் பெருமக்கள் முன்னிலையில்!

இந்த உறுதிமொழிகள் மட்டும், வடவரின் வஞ்சனைக்கு ஆளாகி, நெஞ்சம் கொதித்துக் கிடக்கும் திராவிடரைச் சமாதானப்படுத்திவிட முடியாது.

வடசென்னை தாளமுத்து நடராசன் முன்னேற்ற மன்றம்

10—4—56 இரவு 8 மணிக்கு சென்னை—இராயபுரம், மீனாட்சி அம்மன்பேட்டையிலுள்ள மேற்படி மன்றப் பணிமனையில், மன்ற வளர்ச்சி குறித்து ஆராய, மன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்.

மிகப் பெரிய ரயில்வே தொழிற்சாலை

வடநாட்டிலேயே அமையும்

இந்தியாவிலேயே மிகப் பெரிய இரயில்வே தொழிற்சாலை ('ஒர்க் ஷாப்') எங்கே அமையப் போகிறது தெரியுமா?

பெரம்பூரிலோ, பொன்மலையிலோ அல்ல!

அலகாபாத் அருகே (உத்திரப் பிரதேச மாநிலம்)—வடநாட்டில்தான்—அமையப் போகிறது!

இந்தியாவில் இப்போதுள்ள இரயில்வே தொழிற்சாலைகள் அனைத்திலும் இதுவே மிகப் பெரியதாக இருக்குமாம்!

இத்தொழிற்சாலை, அலகாபாத் நகருக்குச் சுமார் நான்கு மைல் தொலைவிலுள்ள 'பாபமாவ்' என்ற இடத்தில் கட்டப்படுமாம். இதற்கான திட்டம் தீட்டப்படுகிறதாகவும் தெரியவருகிறது.

அமையப்போகும் இடத்தை இரயில்வே மந்திரி பார்வையிட்டாகிவிட்டதாம்!

இந்த ஆண்டிலேயே தொழிற்சாலை நிர்மாண வேலைகள் துவங்கிவிடுமாம்!

14,000 ஏக்கர் நிலம் தேவைப்படுமாம்!

பிலாய் உருக்குத் தொழிற்சாலை அமைப்பதற்காகவாம்!

புதுடில்லி, ஏப். 9—

பிலாய் உருக்குத் தொழிற்சாலையை அமைப்பதற்காக, இதுவரையில் மொத்தம் 3,500 ஏக்கர் நிலம் 'ஆர்ஜிதம்' செய்யப்பட்டிருக்கிறதென்றும், தற்போதைய உத்தேசப்படி தொழிற்சாலைக்கும் உடனடியாக அமையவிருக்கிற நகரப் பகுதிக்கும் மொத்தம் 14,000 ஏக்கர் நிலம் தேவைப்படும் என்றும், மத்திய அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி, மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

இதில் சுமார் 3,600 ஏக்கர் நிலம் சாகுபடியற்றதாகுமாம்!

கல்லக்குடி தி. மு. க. நிதிக்காக

சிறப்புச் சொற்பொழிவு

11—4—56 மாலை 7 மணிக்கு, கல்லக்குடி தி. மு. கழக நிதிக்காக சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம், நாடக அரங்கில், தோழர் ஏ. தம்புசாமி தலைமையில் நடைபெறும்.

தோழர்கள் எஸ். நெடுமாறன், ஏ. தம்புசாமி, செங்குட்டுவன் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றுவர்.

இசைமுரசு நாகூர் அனீபா குழுவினர், இன்னிசை வழங்குவர்.

வடநாட்டில் அமையும்

அலுமினியத் தொழிற்சாலை

10,000 டன் உற்பத்தி சக்தி கொண்டதாக இருக்கும்

புதுடில்லி, ஏப். 9—

ஹிராகுட் அணைக்கட்டுப் பகுதி ஆண்டு ஒன்றுக்கு 10,000 டன் உற்பத்தி சக்தி கொண்ட அலுமினியத் தொழிற்சாலையொன்றை நிறுவுவதற்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கிறதென்று, மத்திய சுரங்கத் தொழில் மந்திரி நித்யானந்த கனுங்கோ மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

இந்த அலுமினியக் கம்பெனி ஒரு இந்திய-கனேடிய கூட்டு முயற்சியாகும்.

அத்தொழிற்சாலைக்குக் குறைந்தபட்சம் 25,000 கிலோவாட் மின்சார சக்தி தேவைப்படும் என்று மதிப்பிடப் பட்டிருப்பதாகவும், அந்த மின்சாரம் முழுவதும் ஹிராகுட் திட்டத்திலிருந்து கிடைக்கும் என்றும் அமைச்சர் கூறினார். அத்தொழிற்சாலை 1957 மத்தியில் உற்பத்தி துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சுய ஆட்சி கோரி மக்கள் கிளர்ச்சி

புதிய முறை கையாண்டனர்

உகாண்டாவுக்கு சுதந்திரம் வேண்டி, அந்நாட்டு தேசியக் காங்கிரஸ் கிளர்ச்சி செய்துவருகிறது.

'சுய ஆட்சி' கொடு என்று ஒலி எழுப்பிக்கொண்டு, ஆப்பிரிக்க மக்கள் கம்பாலா வீதிகள் முழுமையும் பஸ்கள், லாரிகளில் ஏறி உட்கார்ந்து, மணி அடித்துக் கொண்டே ஊர்வலம் வந்தனராம்!

திருத்துறைப்பூண்டிக்கு

இரா. நெடுஞ்செழியன் வருகை

11—4—56 மாலை 5-30 மணியளவில், திருத்துறைப்பூண்டி மஜீத் மன்றச் சார்பில், முள்ளியாற்றில் (கடைத் தெரு அருகில்), தோழர் டி. எஸ். கல்யாணசுந்தரம் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும்.

தி. மு. கழக பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

புயல் நிதி: அமைச்சர் தரும் விவரம்

சென்னை, ஏப். 6—

"மார்ச் இறுதிவரையில், மாநில சர்க்கார் புயல் நிவாரண நிதிக்கு ரூ. 21,81,676—15—6 வசூல் செய்யப்பட்டுள்ளது; இதில் ரூ. 4,52,600-வரை செலவழிக்கப்பட்டிருக்கிறது. மீதித் தொகை புயல் பகுதிகளில் ஏழை மக்களுக்கு 'அசல்' வீடுகளைக் கட்டித் தருவதற்கு பயன்படுத்தப்படும்; இதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டுவருகிறது" என்று, சென்னை மேல்(சட்ட)சபையில், நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இன்னும் இந்தக் கொடுமையா?

பழமை வெறிக்கு பாவை ஒருத்தி பலி

குவாலியர், ஏப். 8—

'உடன்கட்டை' எனும் கொடுமையை, சட்டத்தையும் மீறி, இந்த நாட்களிலும் வடநாட்டில் உள்ள சில வைதீக வெறியர்கள் அனுமதித்து வருகின்றனர்.

குவாலியரிலிருந்து 130 மைல் தொலைவில் உள்ள மொரேனா மாவட்டத்தைச் சேர்ந்த ஷியோபூர் எனும் நகரில், கடந்த சனிக்கிழமையன்று கமலா என்ற பெண்மணி, தன் கணவன் இறந்துபட்டதும் அவனுடன் உடன்கட்டை ஏறி உயிர்விட்டாராம்.

வெள்ளியன்று கமலாவின் கணவரான சுராஜ்ரத்தன் மகேஸ்வரி என்பார் இறந்தாராம். அன்றிரவே 'சதி'க்கான ஏற்பாடுகள் ரகசியமாகச் செய்யப்பட்டனவாம்.

போலீசாருக்கு இதுபற்றித் தகவல் எட்டுமுன்னே, சனிக்கிழமை அதிகாலையில், கணவரின் சடலம் தீ மூட்டப்பட்டபோது, கமலாவும் அதில் குதித்து உயிர் விட்டிருக்கிறார்.

பின்னர் தகவல் அறிந்த போலீசார் இடத்திற்கு விரைந்து சென்று புலன் விசாரணை செய்து வருகின்றனராம்.

2,860 'பூசுவாமிகள்'

'பூசுவாமிகள்'—சிறு சிறு நிலப் பிரபுக்கள் 2,860 பேர் வரை, ஜெய்ப்பூரில் விதிக்கப்பட்டிருந்த 144 தடையுத்தரவை மீறியதாகக் கைது செய்யப்பட்டிருக்கின்றனராம்.

மேலும் தேவிசிங் கூரி, பைரன் சிங் என்ற இருவர் ராஜஸ்தான் தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கின்றனராம்.

சென்னை மேல்(சட்ட)சபை உறுப்பினர்

பேசிக் கொண்டிருக்கையில் மயங்கி விழுந்து மாண்டார்

சென்னை ஏப். 8—

சென்னை மேல் (சட்ட)சபையில் ஆசிரியர் தொகுதி உறுப்பினரான இ. எச். பரமேசுவரன் அவர்கள், கல்விமுறை சீரமைப்பு குறித்து சென்னை சர்க்கார் வெளியிட்டிருக்கும் அறிக்கையை ஆராய்ந்து யோசனைகூற நேற்று மாலை பி. எஸ். உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற ஆசிரியர் கழக ஆண்டு மாநாட்டில் விவாதத்தில் கலந்துகொண்டு பேசிக் கொண்டிருக்கையில், திடீரென மயங்கிக் கீழே விழுந்து, மாரடைப்பின் காரணமாக மரணமுற்றார்.

ஆசிரியர்களின் நலன்களைப் பாதுகாப்பதில் கண்ணுங்கருத்துமாயிருந்த அவர், தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தில் நிர்வாகக் குழு உறுப்பினராகவும், திருநெல்வேலி மாவட்ட ஆசிரியர் கழகத்தின் தலைவராகவுமிருந்து அரும்பணியாற்றினார்.

விடுதலைக் கனவு பலிக்கிறது!

ஸ்பானிஷ் மொராக்கோவும் சுதந்திரம் பெறுகிறது!

மிக மட்டரகமான ஆதிபத்தியவாதிகள் எல்லாம்கூட இன்று, விடுதலை வேட்கையால் போரில் ஈடுபடுவோரின் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து வருவதை, வடநாட்டு ஆதிபத்தியவாதிகளும், அவர்தம் ஏகாதிபத்தியப் பிடிப்பில் சிக்குண்டு தவிக்கும் திராவிடரும் எண்ணிப் பார்த்தாக வேண்டும்.

வட ஆப்பிரிக்காவில் உள்ள மொராக்கோ என்ற அடிமைக் காட்டினை, விடுதலை மணக்கும் பூந்தோட்டமாக மாற்ற, மொராக்கோ மக்கள் நடத்திய மகத்தான போராட்டங்களை நாம் நம் வாழ்நாட்களில், கண்டோம்.

அவர்களது விடுதலைக் கனவு பலிதமாகி வருவதையும் இன்று பார்க்கிறோம்.

மொராக்கோவின் பிரதான பாகத்தை அடிமை கொண்டிருந்த பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் அண்மையில்தான், மொராக்கோவிற்கு விடுதலை வழங்க இணங்கினார்கள்.

இப்போது அதைத்தொடர்ந்து ஸ்பானிஷ் ஆதிபத்தியப்பிடிப்பிலிருந்த 'ஸ்பானிஷ் மொராக்கோ' என்ற மொராக்கோ நாட்டின் மற்றொரு பகுதிக்கும் விடுதலையளித்துவிட ஸ்பானிஷ் ஆதிக்கபுரியினர் சம்மதித்துவிட்டார்கள் என்ற இனிய செய்தி கிடைத்திருக்கிறது.

இன்றைக்கு 44 ஆண்டுகளுக்கு முன், 1912-ல், ஸ்பானிஷ்காரர்கள் பிடியில் சிக்கிய அந்தப் பகுதிக்கு விடுதலை வழங்குகிற ஒப்பந்தம் ஒன்று, மொராக்கோ விடுதலைப் போரின் நடுநாயகமான சிதி முகம்மதுபென் யூசுப்சுல்தானின் பிரதிநிதிகளுக்கும் ஸ்பெயின் நாட்டுத் தலைவரான ஜெனரல் பிராங்கோவின் பிரதிநிதிகளுக்குமிடையே நேற்று முன்தினம் கையெழுத்தாகிவிட்டது.

'மணி முடி' ஆடிற்றும்!

இந்தியாவின் மணி முடி—காஷ்மீரின் தலைநகரான ஸ்ரீநகர், நேற்று முன்தினம், நிலநடுக்கத்தால் கணநேரம் ஆடிற்றும்.

காலை 10 மணி அளவில் ஏற்பட்ட இந்தப் பூகம்பத்தால், உயிருக்கோ, உடமைக்கோ சேதம் ஏதும் ஏற்படவில்லையாம்.

சிறுவர் துறவறம்: தடை செய்ய மசோதா

புதுடில்லி, ஏப். 6—

சிறுவர்கள் துறவறத்தை (சன்னியாச தீட்சை) மேற்கொள்ளும் வழக்கத்தைத் தடை செய்யும் மசோதாவை, மக்கள் சபையில் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் தாக்கல் செய்துள்ளதாகத் தெரிகிறது.

பிள்ளைப் பருவத்தினருக்கு 'காஷாயம்' அணியச் செய்து வைப்போருக்கு 3 மாதச் சிறைத் தண்டனையும் அபராதமும், சம்பந்தப்பட்ட சிறுவனுக்குப் பொறுப்பாகவுள்ளவருக்குத் தண்டனையும் அளிக்கலாமென மசோதா தெரிவிக்கிறது.

தி. மு. க. மீது காமராசர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கவில், மக்கள், மனதைப் பறிகொடுத்துவிடக் கூடாது' என்று வேறு, அவர் கேட்டுக்கொண்டாராம்—மக்கள் மனநிலை அறிய முடியாத இந்தப் 'பெரிய மனிதர்!'

இவர் இப்படிக் கழகத்தின் மீது 'தாக்குதல்' நடத்திய பொதுக்கூட்ட நிகழ்ச்சிக்கு, டாக்டர் சுப்பராயன் தலைமை தாங்கினாராம்.

பொதுச்செயலாளர்

சுற்றுப்பயணம்

ஏப். 10: திருச்சி
11: திருத்துறைப்பூண்டி
12: நாடியம்
13: செந்துறை
14: திருச்சி
15: சென்னை
17: ஆனைகாபுதூர்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.